SRI S. LAZAR : செஷன்ஸ் கோர்ட்டுகளிலே வசதியில்லாத குற்றவாளி களுக்கு சர்க்காரே வக்கீல் வைத்துக் கொடுக்கிறது. அவர்களிலே பெரும் பாலோர் அனுபவமும் திறமையும் இல்லாது இருப்பதாக பொதுவான அபிப்பிராயம் இருக்கிறது. ஆதலால் நல்ல அனுபவம் மிகுந்த வக்கீல்களை அமைக்க அரசாங்கம் முன் வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : யாருக்கு அனுபவம் இருக்கிறது, யாருக்கு இல்லை என்று அதிகாரிகளைப் பற்றி சொல்லுவது சரி அல்ல. வழக்கறிஞர்களிலே ஜூனியர், சீனியர் என்று இருக்கிறார்கள். அவர்கள்தான் வாதாட வேண்டும் என்று விதி இருக்கிறது.

SRI A. GOVINDASAMY : திரு. ஜகந்நாதன் அவர்கள் கேட்ட கேள்விக்கு கனம் அமைச்சர் அளித்த பதிலிலிருந்து இம்மாதிரியான ஒரு சலுகை இருக்கிறது என்று கலெக்டர் ஒரு அறிக்கை மூலம் தெரிவித்து விட்டால், எதிர்ப்பார்த்த விதத்தில் சிக்கிக் கொண்டால் அதிலிருந்து தப்பி த்துக் கொள்ள வழியிருக்காது என்று பொது மக்களுக்கு சொல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஹரிஜனங்களுக்கும் ஏழைகளுக்கும் சலுகை இருப்பதைத் தெரியப்படுத்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு முன் எல்லோருக்கும் தெரியாது. தெரியும்படி செய்யலாம்.

Revenue Budget for 1957–58.

* 52 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state the financial assistance the Government are to get from the Centre to meet the deficit in the revenue budget for 1957–58?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government are not at present getting any financial assistance from the Government of India specifically to meet the deficit in the Revenue Account in 1957–58.

SRI N. K. PALANISAMI : ரெயில்வே கட்டணத்திலிருந்தும், போஸ்டல் வருமானத்திலிருந்தும் மத்திய சர்க்கார் நமக்கு ஒரு விகிதாசாரம் ஒதுக்கியிருக்கிறார்களா ? இந்த ஐந்து வருஷத்திற்கு ஒரு தரம் என்னென்ன தேவை என்பதை அனுசரித்து ஒதுக்குவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The premises of the hon. Member is wrong.

MR. SPEAKER : Questions 53 and 60-A will be taken up together.

Medical Colleges Selection Committee

* 53 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the names of the members of the Selection Committee for admission to the Government Medical Colleges this year; and

(*b*) whether any of the members belong to the backward classes or scheduled castes?